# 01

## அல் - அஸ்மாஉல் ஹுஸ்னா

நாம் அனைவரும் அல்லாஹ்வை ஈமான் கொண்டுள்ளோம். 'அவன் ஏகன், இணை துணையற்றவன், அவனுக்கு நிகராக எவரும் இல்லை, எதுவும் இல்லை' என்று நம்பியிருக்கிறோம்.

அந்த அல்லாஹ்வுக்கு பல அழகுத் திருநாமங்கள் இருக்கின்றன. அவற்றை 'அல் அஸ்மாஉல் ஹுஸ்னா' என்று அழைப்போம்.

''(நபியே) கூறுவீராக! நீங்கள் அல்லாஹ் என்றழையுங்கள் அல்லது அர்ரஹ்மான் என்றழையுங்கள். எப்பெயரைக் கொண்டு அவனை நீங்கள் அழைத்தாலும் அவனுக்குரிய (பல) அழகிய திருநாமங்கள் இருக்கின்றன'' (17:110) என்று அல்குர்ஆன் சுட்டிக் காட்டுகிறது.

அல்லாஹ்வுக்குரிய அழகுத் திருநாமங்களை அல்குர்ஆனின் மூலமும் ஹதீஸின் மூலமும் அறியலாம்.

''அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள். அவனுடைய திருநாமங்களைத் தவறாகப் பயன்படுத்துவோரை (புறக்கணித்து) விட்டு விடுங்கள். அவர்களுடைய செயல்களுக்காக அவர்கள் சீக்கிரத்தில் கூலி கொடுக்கப்படுவார்கள்'' (அல்குர்ஆன் 7:180).

''அல்லாஹ்வுக்கு 99 திருநாமங்கள் உள்ளன. யார் அவற்றை மனனமிடுகின்றாரோ அவர் சுவனத்தில் நுழைவார்'' என்று நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்'' (புஹாரி).

அல் - அஸ்மாஉல் ஹுஸ்னாவை சிலர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்

- அழகுத் திருநாமங்களின் கருத்தை மறுத்தல் அல்லது திரிபுபடுத்தல்.
- அல்லாஹ்வோ, முஹம்மத் ﷺ அவர்களோ குறிப்பிடாத கருத்துக்கள் அத்திரு நாமங்களுக்கு இருப்பதாகக் கருதுதல்.
- அல்லாஹ் அல்லாதவர்களை அழகுத் திருநாமங்களின் மூலம் அழைத்தல்.

என்பன அவற்றுள் சில

எனவே,

- அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்கள் மூலமே அவனை அழைப்போம். அதுவே அவனை மரியாதையாக அழைப்பதற்கான வழி என்பதை நினைவில் கொள்வோம்.
- அத்திருநாமங்களை விளங்கிடுவோம். அதன் மூலம் ஈமானை பலப்படுத்திக் கொள்வோம்.
- அல்லாஹ்வின் திருநாமங்களை மனனமிடுவோம்.
- பிரார்த்தனைகளின்போது அழகுத் திருநாமங்களின் மூலம் அல்லாஹ்வை அழைப்போம். அது பிரார்த்தனைகள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான ஒரு வழி என்பதனை நினைவில் கொள்வோம்.

அவனது திருநாமங்களில் ‘அல்லாஹ்’ என்ற நாமம் தனித்துவமானது. ஏனைய நாமங்கள் அனைத்தும் அவனது பண்புகளை விளக்கி நிற்கின்றன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தி விளங்கலாம்.

**படைத்தலுடன் தொடர்பானவை**

| | | |
|---|---|---|
| சிருஷ்டிகர்த்தா | - | اَلْخَالِقُ |
| உருவாக்குபவன் | - | اَلْبَارِیءُ |
| உருவமமைப்பவன் | - | اَلْمُصَوِّرُ |
| புதிதாக உண்டாக்குபவன் | - | اَلْبَدِيْعُ |
| உண்டாக்குபவன் | - | اَلْمُبْدِیءُ |
| வழிகாட்டுபவன் | - | اَلْهَادِی |
| உயிர்ப்பிப்பவன் | - | اَلْمُحْيِيْ |

**அன்புடன் தொடர்பானவை**

| | | |
|---|---|---|
| அளவற்ற அருளாளன் | - | اَلرَّحْمٰنُ |
| நிகரற்ற அன்புடையோன் | - | اَلرَّحِيْمُ |
| மிகுந்த அன்புடையோன் | - | اَلْوَدُوْدُ |

## வல்லமை / சக்தி தொடர்பானவை

| | | |
|---|---|---|
| பலம் மிக்கவன் | - | اَلْقَوِيُّ |
| திடமானவன் | - | اَلْمَتِيْنُ |
| சக்தி மிக்கவன் | - | اَلْقَادِرُ |
| பூரண சக்தி உடையவன் | - | اَلْمُقْتَدِرُ |
| யாவரையும் மிகைத்தவன் | - | اَلْعَزِيْزُ |

## அறிவுடன் தொடர்பானவை

| | | |
|---|---|---|
| யாவற்றையும் அறிந்தவன் | - | اَلْعَلِيْمُ |
| ஞானம் நிறைந்தவன் | - | اَلْحَكِيْمُ |
| நன்கறிந்தவன் | - | اَلْخَبِيْرُ |
| யாவற்றையும் கேட்பவன் | - | اَلسَّمِيْعُ |
| யாவற்றையும் பார்ப்பவன் | - | اَلْبَصِيْرُ |

## மகத்துவத்துடன் தொடர்பானவை

| | | |
|---|---|---|
| மகத்துவமிக்கவன் | - | اَلْعَظِيْمُ |
| உயர்ந்தவன் | - | اَلْعَلِيُّ |
| பெருமைக்குரியவன் | - | اَلْمُتَكَبِّرُ |
| பெரியவன் | - | اَلْكَبِيْرُ |
| புகழுக்குரியவன் | - | اَلْحَمِيْدُ |
| சங்கையும் சிறப்பும் உடையவன் | - | ذُو الْجَلاَلِ وَالإِكْرَامِ |

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

هُوَ اللّٰهُ الَّذِيْ لَا اِلٰهَ اِلَّا هُوَ

| | | | | |
|---|---|---|---|---|
| الرَّحْمٰنُ | الرَّحِيْمُ | الْمَلِكُ | الْقُدُّوْسُ | السَّلَامُ |
| الْمُؤْمِنُ | الْمُهَيْمِنُ | الْعَزِيْزُ | الْجَبَّارُ | الْمُتَكَبِّرُ |
| الْخَالِقُ | الْبَارِئُ | الْمُصَوِّرُ | الْغَفَّارُ | الْقَهَّارُ |
| الْوَهَّابُ | الرَّزَّاقُ | الْفَتَّاحُ | الْعَلِيْمُ | الْقَابِضُ |
| الْبَاسِطُ | الْخَافِضُ | الرَّافِعُ | الْمُعِزُّ | الْمُذِلُّ |
| السَّمِيْعُ | الْبَصِيْرُ | الْحَكَمُ | الْعَدْلُ | اللَّطِيْفُ |
| الْخَبِيْرُ | الْحَلِيْمُ | الْعَظِيْمُ | الْغَفُوْرُ | الشَّكُوْرُ |
| الْعَلِيُّ | الْكَبِيْرُ | الْحَفِيْظُ | الْمُقِيْتُ | الْحَسِيْبُ |
| الْجَلِيْلُ | الْكَرِيْمُ | الرَّقِيْبُ | الْمُجِيْبُ | الْوَاسِعُ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| الْحَكِيْمُ | الْوَدُوْدُ | الْمَجِيْدُ | الْبَاعِثُ | الشَّهِيْدُ | الْحَقُّ |
| الْوَكِيْلُ | الْقَوِيُّ | الْمَتِيْنُ | الْوَلِيُّ | الْحَمِيْدُ | الْمُحْصِي |
| الْمُبْدِئُ | الْمُعِيْدُ | الْمُحْيِي | الْمُمِيْتُ | الْحَيُّ | الْقَيُّوْمُ |
| الْوَاجِدُ | الْمَاجِدُ | الْوَاحِدُ الْاَحَدُ | | الصَّمَدُ | الْقَادِرُ |
| الْمُقْتَدِرُ | الْمُقَدِّمُ | الْمُؤَخِّرُ | الْاَوَّلُ | الْاٰخِرُ | الظَّاهِرُ |
| الْبَاطِنُ | الْوَالِي | الْمُتَعَالِي | الْبَرُّ | التَّوَّابُ | الْمُنْتَقِمُ |
| الْعَفُوُّ | الرَّؤُوْفُ | مَالِكُ الْمُلْكِ | ذوالجلال والاكرام | الْمُقْسِطُ | الْجَامِعُ |
| الْغَنِيُّ | الْمُغْنِيْ | الْمُعْطِي | الْمَانِعُ | الضَّارُّ | النَّافِعُ |
| النُّوْرُ | الْهَادِيْ | الْبَدِيْعُ | الْبَاقِيْ | الْوَارِثُ | الرَّشِيْدُ |
| الصَّبُوْرُ | | | | | |

## எம் வாழ்விற்கு...

அல்லாஹ்வைப் போன்று சக்தியுடையவன் யாரும் இல்லை. எனவே எதற்கும் அவனையே நாடுவோம்.

அல்லாஹ்வைப் போன்று எம்மீது அன்புடையவன் யாரும் இல்லை. எனவே அவனையே முழுமையாகச் சார்ந்திருப்போம்.

எமது நற்செயல்கள் அனைத்துக்கும் அல்லாஹ் கூலி வழங்கக் காத்திருப்பதனால் நற்கருமங்களில் போட்டியிடுவோம்.

தீமைகளுக்குத் தண்டனை உண்டு. ஆதலால் தீய காரியங்களிலிருந்து முழுமையாக விலகியிருப்போம்.

அல்லாஹ்வைப் போன்று அறிவுடையவன் யாரும் இல்லை. எனவே எமது குறுகிய அறிவை வைத்துப் பெருமையடிக்காதிருப்போம்.

**பயிற்சி:**

1. பொருத்துக

| | |
|---|---|
| உயர்ந்தவன் | اَلْخَالِقُ |
| யாவற்றையும் கேட்பவன் | اَلْعَلِيْمُ |
| யாவையும் அறிந்தவன் | اَلرَّحْمٰنُ |
| சிருஷ்டிகர்த்தா | اَلسَّمِيْعُ |
| அவளவற்ற அருளாளன் | اَلْعَلِيُّ |

2. அல்லாஹ்வின் அன்பை வெளிக்காட்டக் கூடிய பண்புகள் ஐந்தினை எழுதுக.
3. பின்வரும் திருநாமங்களை வைத்து அல்லாஹ் அறிவுடையவன் என்பதை விளக்கிக் காட்டுக.

اَلْعَلِيْمُ    اَلسَّمِيْعُ    اَلْبَصِيْرُ    اَلْخَبِيْرُ

**செயற்பாடு:**

அல் - அஸ்மாஉல் ஹுஸ்னாவை ஒவ்வொருவரும் மனனமிட்டுக் குழுவாக முன்வையுங்கள்.